ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 159/5 — 1975 අප්‍රේල් 17 වැනි බ්‍රහස්පතින්ද — 1975.04.17
159/5 ம் இலக்கம் — 1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

#### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

களுத்துறை கச்சேரியில் கடமையாற்றும் நிறைவேற்று எழுதுவினைஞர் தரம் I ஐச் சேர்ந்த திரு. ஜீ. ஏ. த. சில்வா அவர்களை தன்னுடைய ஏனைய கடமைகளுடன் மேலதிகமாக களுத்துறை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவும் நானுவிதப் பொருட்களும்) யாக விலைக்கட்டுப் பாட்டுச் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சரால் 1972ம் ஆண்டு மே மாதம் 3ம் திகதியிலிருந்து செய்யப்பட்ட நியமனம் அமைச்சரவர்களால் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஜெயந்தா கெலேகம,
செயலாளர்,
வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சு.

கொழும்பு,
1975 ஏப்ரல் 7 ந் திகதி.

4–512

---

#### வேண்டுதற் கட்டளை இலக்கம் 157

கூட்டுறவுச் சங்கங்களின் (விசேட ஏற்பாடுகள்) 1970 ஆம் ஆண்டு 35வது இலக்க அதிகாரச்சட்டம்

10ம் பிரிவிற்குட்பட்ட கட்டளை

1970 ஆம் ஆண்டு 35 வது இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் 10 (1)ம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்பேரில் வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரியான திக்கிரி பண்டார இலங்கரத்ன ஆகிய நான் இக்கட்டளையில் உள்ள பட்டோலையில் குறிக்கப்பட்ட சொத்தை மட்டுப்படுத்தப்பட்ட மஹாநுவர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் (பதிவெண் ம/2427) வியாபார தேவைகளுக்காக வேண்டி 30 ம் தினம் ஏப்பிரில் மாசம் 1975 ம் ஆண்டு தொட்டு இத்தால் வேண்டுதற் கட்டளை இடுகிறேன்

டீ. பீ. இலங்கரத்ன,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரி.

கொழும்பு
1975, ஏப்பிரில் 4 ஆந் திகதி

பட்டோலை

மஹநுவர மாவட்டத்திலுள்ள மஹநுவர காரியாதிகாரியின் பிரிவிலே கட்டுக்கெலே கிராமசேவையாளரின் பகுதியிலே 2640 சதுர அடி அளவில் அமைந்துள்ளதும் மதிப்பீட்டிலக்கம் 38 இனைத் தாங்கியுள்ளதும் திரு. எம். மொறீட் அவர்களுக்கு உரியதுமான இரண்டு அடுக்குக் கட்டடம் ஒன்று.

இதனைச் சூழ்ந்துள்ள எல்லைகளாவன :—

வடக்கு : விளக்கமறியல் சிறைச்சாலைக் கட்டடம் ;

கிழக்கு : மதிப்பீட்டிலக்கம் 36, சேர் பேர்னுட் சொய்சா மாவத்தை ;

தெற்கு : சேர் பென்னெற் சொய்சா மாவத்தை ;

மேற்கு : மதிப்பீட்டிலக்கம் 40, சேர் பென்னெற் சொய்சா மாவத்தை.

4–513

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.